73

<u>நகர் ஊரமைப்புத் துறை</u>

அனுப்புநர்
திரு. ராஜேஷ் லக்கானி, இஆப,
முதன்மை செயலர் /
நகர் ஊரமைப்பு ஆணையர் (மு.கூ.பொ.),
807, அண்ணா சாலை,
சென்னை - 600 002.
www.tn.gov.in/tcp

பெறுநர்
திரு.V.கன்னியப்பன்,
48-A, காரணை புதுச்சேரி மெயின் ரோடு,
ஊரப்பாக்கம்,
சென்னை-603 210.

<u>ந.க.எண்.6611 / 2019 / எல்ஏ1, நாள்: 07.05.2019.</u>

அய்யா,

பொருள்: மனைப்பிரிவு வரைபட நகல் - நகர் ஊரமைப்பு - தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் ம.வ./ந.ஊ.இ. எண்.996/1994-ன் நகல் வழங்கிட கோருதல் - தொடர்பாக.

பார்வை: 1. மனுதாரர் திரு.V.கன்னியப்பன் அவர்களின் கடிதம் நாள்.04.04.2019 மற்றும் 29.04.2019.
2. இவ்வலுவலக கடிதம் இதே எண்:- நாள்.23.04.2019.

-----

பார்வை 2-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதத்திற்கிணங்க பார்வை 1-ல் சுட்டிய தங்கள் கடிதம் நாள்.29.04.2019-ன் மூலம் நன்னிலை வரி செலுத்தி அதன் அசல் செலுத்துச் சீட்டு சமர்ப்பித்ததற்கிணங்க இத்துறையால் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு ம.வ./ந.ஊ.இ.எண்.996/1994-ன் வரைபட நகல் இத்துடன் சான்றொப்பமிட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.

மேற்படி வரைபடத்திற்கு இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் நில உரிமை, உள்ளாட்சியால் உறுதி செய்யப்பட்டு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகளை உள்ளாட்சி தானமாக பெற்றுக்கொண்டு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்ட பின்னரே இம்மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற மனைப்பிரிவாக கருதப்படும்.

<u>இணைப்பு:</u>
வரைபட நகல் -1

17/05/19
நகர் ஊரமைப்பு ஆணையர் (மு.கூ.பொ.)க்காக

17.5.15

KSR

Scanned by CamScanner

77

ஊரப்பாக்கம் ஊராட்சி தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை – திரு .சா.பாபு

ந.க.எண். 61/19–20

நாள்– 2.08.2019

பொருள் கட்டிட வரைபட அனுமதி – காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் – ஊரப்பாக்கம் ஊராட்சி பிரியாநகர் விரிவு IV ஊரப்பாக்கம் கிராமம், நில அளவை எண் – 104/1D மனை எண் – 26& 27 கட்டிடம் / சுற்றுச்சுவர் /கிணறு முதலியன கட்டுவதற்கு அனுமதி வழங்கி உத்தரவிடல்.

பார்வை
1) அரசு ஆணை எண் 255 நாள் 19.08 .1997.
2) DTCP Approved Date and Number-
3) இவ்வலுவலக துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களின் ஆய்வறிக்கை நாள் –

உத்தரவு

திரு.திருமதி.v.கன்னியப்பன்,G.சினிவாசன்,N.முருகன்,என்பவர் ஊரப்பாக்கம் ஊராட்சி பிரியா நகர் விரிவு IV ஊரப்பாக்கம் கிராமம், மனை எண் –26&27ல் சர்வே எண்104/1 D ஆகிய பகுதிகளில் கட்டிடம்/சுற்றுசுவர்/ கிணறு/கழிப்படம்/குளியலறை /கடைகள் /முதல் தளம்/ இரண்டாம் தளம்/ பேருந்து வண்டிகள் நிறுத்துமிடம் ஆகியவைகள் கட்டுவதற்கு வரைபடத்திற்கு கவ/தனி அலுவலர் (செ.ம) எண் – /2019– 20 என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி அளிக்கப்படுகியது

இந்த அனுமதியானது 2.08.2019 –நாள் முதல் 1.08.2020 – தேதி வரை ஒரு ஆண்டிற்கு செல்லுபடியாகும். அனுமதி கட்டணம் ரூ.62022/– (ரூபாய் அறுபத்து இரண்டாயிரத்து இருபத்து இரண்டு மட்டும்) செலுத்திமைக்கான பலவகை இரசீது எண் –7248 நாள் 2.08.2019 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

<u>நிபந்தனைகள்</u>

- கட்டிடத்தின் முன் பக்கத்தில் 1 மீட்டருக்கு குறையாமலும், பின் பகுதியில் 1 மீட்டருக்கு குறையாமலும் இருபக்கங்களிலும் 1 மீட்டருக்கு குறையாமலும் இடைவெளி விடப்பட்டிருக்க வேண்டும்.
- தமிழ்நாடு ஊராட்சியின் 1994ம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும்.
- அரசங்கத்திற்கு சொந்தமான இடங்களிலோ அல்லது இம்மனுதாரருக்கு சம்பந்தமில்லாத வேறு இடங்களிலே ஆக்கிரமணம் செய்வது கூடாது.
- கட்டிட வேலைகள் நடக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த நேரங்களிலோ ஊராட்சியிலிருந்து ஆய்வு செய்ய வரும் அதிகாரிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை காண்பிக்க வசதியாக வேலை நடக்குமிடங்களில் மேற்படி வரைபடங்களை வைத்திருத்தல் வேண்டும்.

Scanned by CamScanner

❖ இந்த உத்தரவில் அனுமதிக்கப்பட்ட கால வரையறுக்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படாவிடில் அனுமதியை மீண்டும் புதியதாக மனு கொடுத்து அனுமதி பெற வேண்டும்

❖ புறம்போக்கு மற்றும் இதர அரசுக்குச் சொந்தமான இடங்களில் எந்தவித ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது

❖ அனுமதித்த வரைபடத்தில் கூடுதலோ அல்லது மாறுதல் ஏதேனும் செய்து கட்ட வேண்டுமானால் அதற்குரிய திருத்தப்பட்ட வரைபடங்களுடன் தலைவர் / நிர்வாக அதிகாரிக்கு / தனி அலுவலருக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகுதான் மாறுதல் கட்டிடம் கட்ட வேண்டும்.

❖ நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) கட்டிட வரைபட ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இக்கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும். எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய ஊராட்சித் துறை பொருத்தமான அமைப்பு அல்ல

❖ கட்டிடம் கட்ட உத்திரவு பொய்ப்பதிவுகள் மூலம் பெற்றதாகவோ அல்லது ஏதேனும் கட்டிட விதிகளுக்கு புறம்பாகவோ பெற்றதாயிருந்தால் மேற்படி உத்திரவை ரத்து செய்ய தலைவருக்கு / தனி அலுவலருக்கு உரிமை உண்டு

❖ புதியதாக கட்டப்படும் கட்டிட இங்கள் எந்த நேரத்திலும் சுத்தமான பொது சுகாதாரக்கேடு விளைவிக்காத வகையில் வைத்து இருத்தல் அவசியம்.

❖ மனுதாரர் கட்டிடத்தை கட்டி முடித்த பின்பு இவ்வலுவலகத்திலிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே குடிபுக வேண்டும்.

❖ கட்டிடத்திலிருந்து வரும் கழிவு நீரை மனுதாரர் தன் சொந்த இடத்திற்குள்ளேயே நிறுத்தி வைத்து அவைகளை அப்புறப்படுத்தும் வகையில் வடிகால்களும், கழிவு நீர்த் தொட்டிகளும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

❖ கட்டிடம் தொழிலகங்களுக்காவோ அல்லது வேறு தொழிலாளர் வேலை செய்ய வேண்டிய இடங்களுக்காகவோ கட்டப்படயிருந்தால் அவைகளுக்கு மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்து தொழிலங்களின் ஆய்வாளரிடமிருந்து மற்றும் உறுப்பினர்செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் ஆகியோரிடமிருந்தும் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்

❖ அங்கிகரிக்கப்பட்ட வரைபடங்களின் படியே கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு இவ்வூராட்சியிலிருந்து சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டும்.

❖ கட்டிட வேலை முடிந்த பின்போ அல்ல குடியேறிய பின்னரோ 15 தினங்களுக்கு தலைவர் / தனி அலுவலர் அவர்களுக்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

தனி அலுவலர் / நிர்வாக அலுவலர்(கி.ஊ),
ஊரப்பாக்கம் ஊராட்சி.
தனி அலுவலர்
ஊரப்பாக்கம் ஊராட்சி

பெறுநர்

திரு.V.கன்னியப்பன்,G.சினிவாசன்,N.முருகன் ,

பிரியா நகர் விரிவு IV ,

ஊரப்பாக்கம் .

Scanned by CamScanner

விடில்
ம்

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி.பு.கவிதா,B.E.,M.Plan.,

ந.க.எண். 3257/2019/செம3 நாள் : .07.19

பொருள் : குடியிருப்பு கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு – காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஊரப்பாக்கம் ஊராட்சி/கிராமம், ச.எண்கள்.103/2,4,5; 104/1,2,3 மற்றும் பலவற்றில் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு ம.வ/ந.ஊ.இ.எண்.996/94-ல் மனை எண்.26,27-ஐ ஒருங்கினைத்து (புதிய ச.எண்.104/1D) 0.04.0 ஹெக்டேர் பரப்பு மனையிடத்தில் 803.58 சமீ கட்டிடப்பரப்பில் தரைகீழ்தளம் + 3 தளங்களில் 12 குடியிருப்புகள் கொண்ட கட்டிட வரைபடத்திற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்குதல் - தொடர்பக.

பார்வை :
1. மனுதாரர் திரு.கன்னியப்பன், திரு.G.சினிவாசன்,திரு.N.முருகன் அவர்களின் கடிதம் நாள் : 29.05.2019.
2. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 7486/09/பிஏ2, நாள் : 16.04.2009
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21075/09/பிஏ1, நாள் : 04.04.2012
4. அரசாணை (நிலை) எண். 86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் : 28.03.12
5. அரசாணை எண். 85, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் : 16.05.2017
6. அரசாணை (நிலை) எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 04.02.19
7. அரசாணை (நிலை) எண். 18, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் : 04.02.19
8. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் :18.06.2019 (கூராய்வு கட்டணம்,நன்னிலைவரி, I & A , CC Charges, Security Deposit Fee, Display Board Deposit fee, ஆகிய கட்டணங்கள் கோரப்பட்டது)
9. மனுதாரர் திரு.கன்னியப்பன், திரு.G.சினிவாசன்,திரு.N.முருகன், அவர்கள் கடிதம் நாள். 24.06.2019 (கூராய்வு கட்டணம், நன்னிலைவரி, I & A , CC Charges, Security Deposit Fee, Display Board Deposit fee, ஆகிய கட்டணங்கள் செலுத்தப்பட்டது).
10. நகர் ஊரமைப்பு ஆணையர் சுற்றறிக்கை கடிதம் எண். 9860/10 முதி1 நாள் : 20.9.16-ன்படி edcr online Unique ID. SCR-24/4/2019: 125405 நாள் : 27.12.18 Online Application No. 2019002020045533 நாள் : 11.04.2019

---------------

Scanned by CamScanner

உத்தரவு :

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஊரப்பாக்கம் ஊராட்சி/கிராமம், ச.எண்கள்.103/2,4,5; 104/1,2,3 மற்றும் பலவற்றில் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு ம.வ/ந.ஊ.இ.எண்.996/94-ல் மனை எண்.26,27-ஐ ஒருங்கினைத்து (புதிய ச.எண்.104/1D) 0.04.0 ஹெக்டேர் பரப்பு மனையிடத்திற்கு 'ABCD' என எல்லையிட்டு மனை ஒருங்கினைப்பு ஒப்புதலும் அம்மனையில் 803.58 சமீ கட்டிடப்பரப்பில் தரைகீழ்தளம் + 3 தளங்களில் 12 குடியிருப்புகள் கொண்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ./ந.ஊ.து.இ(செம) எண். **30/2019** என எண்ணிடப்பட்டு பின்வரும் நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்படுகிறது.

**Area Statement**

edcr No. SCR – 24/4/2019: 125405
Site Area –Plot No. 26427 = 413 sqm

| Builtup Area Detail | Built up area sqm | |
|---|---|---|
| Stilt Floor | 267.86 | வாகன நிறுத்துமிடம் |
| First Floor | 267.86 | 4 குடியிருப்புகள் |
| Second Floor | 267.86 | 4 குடியிருப்புகள் |
| Third Floor | 267.86 | 4 குடியிருப்புகள் |
| | **803.58** | 12 குடியிருப்புகள் |

பார்வை 2 முதல் 7 வரை காண்டுள்ள அரசாணைகள் மற்றும் சுற்றறிக்கைகளின்படி கூராய்வு கட்டணம் நன்னிலை வரி, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதி கட்டணம் (ம)CCC Charges செலுத்தக் கோரி, பார்வை(8)ல் சுட்டிய இவ்வலுவலக கடிதங்கள் மூலம் கோரப்பட்டு, பார்வை(9)ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய கூராய்வு கட்டணங்கள் மனையிடத்திற்கு - ரூ.620/- + கட்டிபரப்பிற்கு ரூ.1620/-. = **ரூ.2240/-,** நன்னிலை வரி **ரூ.1,800/-,** I & A கட்டணம் ரூ.3,06,000/-, CC கட்டணம் **ரூ.8,816/-** Display Board ரூ.10,000/- (ம) Security Deposit ரூ.1,53,000/- பெறப்பட்டுள்ளது.

சிறப்பு நிபந்தனைகள் :

1. It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.
2. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning Permission is issued subject to the condition that the applicant/developer and also the architects/Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

Scanned by CamScanner

3. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
4. மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
5. கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில், பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில், வளர்ச்சி கட்டுப்பாட்டு விதிகளின்படி தளப்பரப்பு விகிதம் (FSI), திறவிடங்கள் (Set back) வாகன நிறுத்தம் மற்றும் பல நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
6. The Provisions in the G.O. (Ms) No. 17, H & UD (UD4(3)), Department, dated : 05.02.2016 relating to installation and use of solar energy system should be followed.

நிபந்தனைகள் :-

1. குடியிருப்பு கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண். 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் : 11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றிற்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

Scanned by CamScanner

8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண். 341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் : 03.11.2004-ன்படி செப்டிக் டேங்கில் "U"Trap அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகலுடன் மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

13. உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய சட்டம் 1974 பிரிவு 25 (Water act)-ன்படி மேற்படி வாரிய இணக்கம் (consent) பெறப்பட வேண்டும்.

முத்திரையிடப்பட்ட வரைபடம் இரண்டு மற்றும் செயலாணை கடிதம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் இறுதி உத்தரவினை விண்ணப்பதாரருக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட செயலாணை கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புகைச் சான்றினை அனுப்பி வைக்குமாறு தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3/7/19

நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர்,
செங்கல்பட்டு மண்டலம்,
செங்கல்பட்டு.

: ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடம் - 2 தொகுப்பு
(2 x 1 = 2)

3/7/19

பெறுநர் : தனி அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
ஊரப்பாக்கம் ஊராட்சி,
காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
செங்கல்பட்டு வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

நகல் : திரு.கன்னியப்பன்,
திரு.G.சினிவாசன்,
திரு.N.முருகன்,
No.48A, காரணை புதுச்சேரி மெயின் ரோடு,
ஊரப்பாக்கம்,
செங்கல்பட்டு வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 603 210.

Scanned by CamScanner